வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632

# ஈழநாடு
Eelanadu

விலை ரூ. 30/=

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 01.12.2025 திங்கட்கிழமை இதழ் : 335 பக்கங்கள் : 08

## "டித்வா"வின் அபாயம் நீங்கியது; அவதானமாக செயல்படுங்கள்!

பேராசிரியர் பிரதீபராஜா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 01

டித்வா புயல் நாட்டை விட்டு முழுமையாக நீங்கிவிட்டது. எனினும், ஏற்கனவே கிடைத்த மழையால் ஆறுகள் குளங்களுக்கான நீர்வரத்து இன்னும் மூன்று நாட்களுக்கு தொடர்ச்சியாக இருக்கும். எனவே, பொதுமக்கள் அவதானமாக செயல்பட வேண்டும்

07

# பேரிடரை நிர்வகிக்க மட்டுமே அவசரகால சட்டம் நடைமுறை

## விசேட உரையில் ஜனாதிபதி தெரிவிப்பு

- அனைத்து மக்களுக்கும் நிவாரணம் கிடைக்கும்
- வேறுபாடு மறந்து நாட்டுக்காக இணைவோம்

கொழும்பு, டிசெம்பர் 01

இயற்கை பேரிடரால் ஏற்பட்ட அழிவை நிர்வகித்து வேகமான - வினைத்திறனான மீள்நிர்மாணத்துக்காகவே அவசரகாலச் சட்டம் நடைமுறைப்படுத் தப்பட்டுள்ளது. வேறெந்த ஒடுக்குமுறைக்கும் இந்தச் சட்டம் பயன்படுத்தப்படாது என்று ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் அவர் மக்களுக்கு ஆற்றிய விசேட உரையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவரின் நீண்ட உரையின் முக்கிய அம்சங்கள் வருமாறு,

நாடென்ற வகையில் நாம் வரலாற்றில் மிகப்பெரிய - மிகவும் சவாலான இயற்கை பேரிடருக்கு முகங்கொடுத்துள்ளோம். இந்த நாட்டின் வரலாற்றில் மிகவும் சவாலான மீட்பு நடவடிக்கையை நாம் ஆரம்பித்துள்ளோம். முழு நாடும் பேரிடருக்கு உள்ளான முதல் அனுபவம் இது.



அன்பான பெற்றோர்களே, சகோதர சகோதரிகளே, இந்தப் பேரழிவில் இறந்த அனைவரையும் மீண்டும்

07

# இயற்கை பேரிடர் பலி 334ஆக உயர்வு

## 370 பேரை காணவில்லை

கொழும்பு, டிசெ. 01

நிலவும் சீரற்ற கால நிலையால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 334ஆக அதிகரித்துள்ளது. அத்துடன், 370 பேர் காணாமல் போயுள் ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

மேலும், நாடு முழுவதும் 3 இலட்சத்து 9 ஆயிரத்து 607 குடும்பங்களை சேர்ந்த 11 இலட்சத்து 18 ஆயிரத்து 929 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒரு இலட்சத்து 96 ஆயிரத்து 790 பேர் இடம் பெயர்ந்த நிலையில் அவர்கள் இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. கண்டி மாவட்டத்தில் 103 பேர் உயிரிழந்தனர். 180 பேர் காணாமல் போயுள்ளனர் என்று மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது. அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் அறிக்கையின்படி கண்டியில் 88 மரணங்களும் 150 பேர் காணாமல் போயுள்ளனர் என்று பதிவாகியுள்ளன.

இதேசமயம், பதுளையில் 71 மரணங்களும், நுவரெலியாவில் 68,

07

## அரச சேவைகள் இன்றுமுதல் வழமைக்கு

கொழும்பு, டிசெ. 01

பேரிடரால் பாதிக்கப்படாத அரச திணைக்களங்கள், பணிமனைகள் இன்று முதல் வழக்கம் போல் திறக்கப்படவுள்ளன.

இவற்றின் சேவைகள்

07

# மாவிலாறு அணை உடைப்பு பல கிராமங்கள் வெள்ளத்தில்!



## 231 பேர் ஹெலி மூலம் மீட்பு

திருகோணமலை, டிசெ. 01

மாவிலாறு அணைக்கட்டு உடைந்தமையால் மூதூர், வெருகல், சேருவில பிரதேச செயலர் பிரிவுகளில் பல கிராமங்கள் மூழ்கியுள்ளன. ஆயிரக்கணக்கானவர்கள் இருப்பிடங்களிலிருந்து இடம்பெயர்ந்துள்ளனர். திடீர் வெள்ளத்தில் சிக்கிய

07

# பட்டப்பகலில் விரட்டிவிரட்டி இளைஞர் வெட்டிக்கொலை!

## திருநெல்வேலியில் நேற்று பயங்கரம்

த.பிரதீபன், பு.கஜிந்தன்

யாழ்ப்பாணம், டிசெ. 01

பட்டப்பகலில் வீதியில் ஓட ஓட இளைஞர் ஒருவர் வன்முறை குழுவால் வாளால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டார்.

திருநெல்வேலி - சந்தைக்கு அண்மையாக நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில்,

07

**சீரற்ற காலநிலை:**

## யாழில் மூவர் மரணம் 36 ஆயிரம் பேர் பாதிப்பு

பு. கஜிந்தன், த. பிரதீபன்

யாழ்ப்பாணம், டிசெ. 01

நிலவும் சீரற்ற காலநிலையால் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மூவர் உயிரிழந்தனர். 11 ஆயிரத்து 193 குடும்பங்களை சேர்ந்த 36 ஆயிரத்து 88 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி. என். சூரியராஜா தெரிவித்துள்ளார்.

வெள்ளத்தால் 5 ஆயிரத்து 243 பேர்

07

## நிவாரண பணியில் ஈடுபட்ட ஹெலி விபத்துக்குள்ளானது!

### விமானி பலி: நால்வர் காயம்

சிலாபம், டிசெ. 01

நிவாரணப் பணியில் ஈடுபட்டிருந்த ஹெலிகொப்டர் விபத்துக்குள்ளானதில் விமானி உயிரிழந்தார். அத்துடன், நால்வர் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

புத்தளம் - வென்னப்புவ - லுணுவில பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

விமானி ஹெலிகொப்டரை அவசரமாக தரையிறக்க முயன்றபோது, அது ஜின் ஆற்றில்

07

## தர்க்கம் வாள்வெட்டில் முடிந்தது மருமகனும் மாமனாரும் காயம்!

த.காண்டீபன்

வடமராட்சி, டிசெ. 01

மாமனாருக்கும் மருமகனுக்கும் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் வாள்வெட்டில் முடிந்ததில் இருவரும் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்று மாலை வடமராட்சி - துன்னாலையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் குறித்து மேலும் அறிய வருபவை வருமாறு,

மாமனாருக்கும் மருமகனுக்கும் இடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்ட நிலையில், மாமனார் மருமகனை வாளால் வெட்டினார் என்றும்

07

## சகல பரீட்சைகளும் பிற்போடப்பட்டன!

கொழும்பு, டிசெ. 01

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் க.பொ.த. உயர்தரப் பரீட்சை உட்பட சகல பரீட்சைகளும் மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளன என்று பரீட்சைகள் திணைக்களம் மீண்டும் அறிவித்துள்ளது.

07

## பாதிக்கப்பட்ட சகலருக்கும் உலருணவை வழங்குங்கள்

### பாதுகாப்பு செயலர் உத்தரவு

கொழும்பு, டிசெ. 01

இடைத்தங்கல் முகாம்களுக்கு செல்பவர்களுக்கு மாத்திரம் உலருணவு வழங்க வேண்டும் என்று அனர்த்த நிவாரண சேவை சுற்றறிக்கை மற்றும் வழிகாட்டல்களில் குறிப்பிடப்படவில்லை. அவற்றுக்கு வருகை தராத, பாதிக்கப்பட்ட சகல தரப்பினருக்கும் உலருணவு வழங்க வேண்டும் என பாதுகாப்பு அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

மாவட்ட செயலாளர்கள், பிரதேச சபை

07

## சுண்டிக்குளத்தில் 5 கடற்படையினரை காணவில்லை!

த.காண்டீபன்

வடமராட்சி, டிசெ. 01

சுண்டிக்குளத்தில் முகத்துவாரத்தை அகலப்படுத்தும் பணியில் ஈடுபட்டிருந்த கடற்படையினர் ஐவர் காணாமல் போயிருந்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை சீரற்ற

07

## பொன்னாலை கடலில் மீன்பிடித்தவர் மரணம்

பு. கஜிந்தன்

யாழ்ப்பாணம், டிசெ. 01

பொன்னாலை சிறு கடலில் மீன்பிடிக்கச் சென்ற ஒருவர் உயிரிழந்தார். பொன்னாலையை சேர்ந்த நாகன் கிருஷ்ணமூர்த்தி (வயது 63) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

இவரின் மரணம் தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இதேநேரம், சீரற்ற காலநிலையால் யாழ்ப்பாணத்தில் மூவர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சீரற்ற காலநிலை பாதிப்பு:

# எடுக்கப்படும் நடவடிக்கை தொடர்பில் ஆராயப்பட்டது



யாழ்ப்பாணம், டிசெ. 01

யாழ். மாவட்டத்தில் சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் நிலைமைகள் தொடர்பாக எடுக்கப்பட்ட - எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளின் முன்னேற்றம் தொடர்பில் அரசாங்க அதிபர் ம. பிரதீபன் பிரதேச செயலர்களுடன் நேற்று கலந்துரையாடினார்.

இணையவழியில் நடந்த இந்தக் கலந்துரையாடலில் சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்க வேண்டிய உதவிகளை துரிதமாக மேற்கொள்ள வேண்டும் என்று கூறினார். அத்துடன், இதுவரையான ஒத்துழைப்புகளுக்கும் நன்றி தெரிவித்தார்.

மேலும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு சமைத்த உணவு, உலர் உணவுப் பொருட்கள் வழங்குவதற்காக - தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்தால் 6 கோடி ரூபாய் நிதி தற்போது விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

மேலும், தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்தின் சுற்றுநிருபத்திற்கு அமைவாக - சமைத்த உணவு அல்லது உலர் உணவுப் பொருட்கள் வழங்குதல் தொடர்பாக பிரதேச செயலாளர்களுக்கு பின்வரும் அறிவுறுத்தல்கள் அரசாங்க அதிபரால் வழங்கப்பட்டது.

பாதுகாப்பு நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கு 03 நாட்களுக்கு சமைத்த உணவு பிரதேச செயலாளர் ஒழுங்கமைப்பில் வழங்க முடியும், மேலதிக நாட்களுக்கு வழங்க வேண்டியிருப்பின் அரசாங்க அதிபரின் அனுமதி பெற்று மேலும் 4 நாட்களுக்கு வழங்க முடியும். அதற்கு மேலும் 7 நாட்களுக்கு அல்லது அதற்கு அதிகமான காலத்துக்கு வழங்க வேண்டிய தேவை ஏற்படின் அமைச்சின் செயலாளரின் அனுமதியைப் பெற்று வழங்கமுடியும்.

சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்டு பாதுகாப்பு நிலையங்களில் தங்கியிருக்காமல் அவர்களின் வீடுகள் அல்லது நண்பர்கள், உறவினர்கள் வீடுகளில் தங்கியிருப்பவர்களுக்கு பாதிக்கப்பட்டவர்கள் என்ற அறிக்கையிடலுடன் அவர்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் அல்லது சமைத்த உணவு வழங்கலாம்.

அரச சார்பற்ற நிறுவனங்களால் வழங்கப்படும் பொருட்கள் பிரதேச செயலாளர்கள் மூலமே பதிவு செய்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்க வேண்டும். ஏற்கனவே பிரதேச செயலகங்களுக்கு அவசர தேவைக்கு ஏற்ப வழங்கப்பட்ட தறப்பாள், நுளம்பு வலைகள், மடிக்கும் கட்டில்கள் வழங்கப்பட்டதற்கு மேலதிகமான தேவைப்பாடுகளை வழங்குவதற்கான கோரிக்கைகளை தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்துக்கு தம்மால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும், கிடைக்கப்பெற்றதும் பிரதேச செயலகங்களின் தேவைக்கு ஏற்ப பங்கிட்டு வழங்கப்படும்.

மேற்படி பிரதேச செயலாளர்கள் தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்தின் சுற்றுநிருபங்கள், அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்தின் வழிகாட்டுதல்கள் மற்றும் இது தொடர்பான திருத்தப்பட்ட கடிதங்கள் தொடர்பாக கிராம மட்ட உத்தியோகத்தர்களுக்கு உரிய தெளிவூட்டல்களை வழங்கி பாதிக்கப்பட்ட மக்களுக்கு எவ்வித இடையூறும் அற்ற வகையில் சமைத்த உணவு வழங்குமாறு பிரதேச செயலாளர்களை அரசாங்க அதிபர் கேட்டுக் கொண்டார். (ஐ-03-05)

# யாழின் வெள்ளப் பாதிப்புகளை நேரில் பார்வையிட்ட அமைச்சர்

யாழ்ப்பாணம், டிசெ. 01

சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளையும் அமைச்சர் இ. சந்திரசேகர் நேற்று நேரில் சென்று பார்வையிட்டார்.

தங்குமிடங்களிலிருந்து இடம்பெயர்ந்த குடும்பங்களை சந்தித்து, அவர்களின் உடனடி தேவைகள், சுகாதார நிலை, குழந்தைகள், முதியவர்கள் போன்றோரின் பாதுகாப்பு குறித்து அமைச்சர் கேட்டறிந்தார். அங்கு தங்கியிருந்த மக்களுக்கு உலர் உணவுப் பொருட்கள், குடிநீர், குழந்தைகளுக்கான பயன்பாட்டு பொருட்கள் உள்ளிட்ட அவசர நிவாரண பொருட்கள் வழங்கிவைக்கப்பட்டன.

வெள்ளத்தால் ஏற்படும் சுகாதார அபாயங்களைத் தவிர்க்க அத்தியாவசிய மருத்துவ வசதிகள் விரைவாக ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதற்காக சுகாதார அதிகாரிகளுடன் அமைச்சர் சிறப்பு கலந்துரையாடலில் ஈடுபட்டார். வெள்ளநீரில் பரவக்கூடிய தொற்றுநோய்களை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள், மருத்துவ குழுக்கள் அனுப்புதல், அவசர மருத்துவ பொருட்கள் விநியோகம் போன்றவை குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

அத்துடன், மாவட்ட செயலாளர், பொலிஸ், இராணுவம், கடற்படை மற்றும் பாதுகாப்புப் படையினருடன் அமைச்சர் அவசர ஒருங்கிணைப்பு கூட்டத்தையும் நடத்தினார். வெள்ளநீர் வெளியேற்றம் செய்ய வேண்டிய பகுதிகள், தாழ்வான இடங்களில் தங்கியிருக்கும் குடும்பங்களை பாதுகாப்பான முகாம்களுக்கு மாற்றும் பணிகள், படகு மற்றும் வாகன வசதிகள் உள்ளிட்ட அனைத்தும் உடனடியாக செயல்படுத்துமாறு அவர் உத்தரவிட்டார். (ஐ-03-05)

# கொடிகாமத்தில் 307 பேர் வெள்ளத்தால் இடப்பெயர்வு

தென்மராட்சி, டிசெ. 01

கொடிகாமத்திலிருந்து 107 குடும்பங்களை சேர்ந்த 307 பேர் வெள்ளத்தால் இடம்பெயர்ந்துள்ளனர். நிலவும் தொடர் மழை யுடனான காலநிலையால் தென்மராட்சியின் கொடிகாமம் மத்தி, கொடிகாமம் தெற்கு பகுதிகளை சேர்ந்த மக்களே இவ்வாறு இடம்பெயர்ந்துள்ளனர்.

இடம்பெயர்ந்த மக்கள் கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலையில் 25 குடும்பங்களை சேர்ந்த 66 பேரும் கொடிகாமம் அரசினர் வித்தியாலயத்தில் 31 குடும்பங்களைச் சேர்ந்த 86 பேரும் போக்கட்டி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் 26 குடும்பங்களைச் சேர்ந்த 74 பேரும் போக்கட்டி அ.த. க. பாடசாலையில் 17 குடும்பங்களை சேர்ந்த 64 பேரும் கச்சாய் மகா வித்தியாலயத்தில் 8 குடும்பங்களை சேர்ந்த 17 பேரும் தங்க வைக்கப்பட்டுள்ளனர். (ஐ)

# மன்னாரில் வெள்ளத்தில் சிக்கியோரை மீட்டது ஹெலி



வவுனியா, டிசெ. 01

மன்னார் குஞ்சுக்குளத்தில் வெள்ளப்பெருக்கில் சிக்கிய 3 பேரை இலங்கை விமானப் படையினர் ஹெலிகொப்டர் மூலம் மீட்டுள்ளனர்.

விமானப் படைக்கு சொந்தமான பெல்-212 ஹெலிகொப்டர் நேற்றுக் காலை வெள்ளத்தில் சிக்கிய மூவரையும் மீட்டது.

விமானப் படை ரெஜிமென்ட் விசேட படைப் பிரிவின் மீட்புக் குழுவினர் அவர்களை மீட்டனர். மீட்கப்பட்டவர்கள் வவுனியா பொது மருத்துவமனையில் சேர்க்கப் பட்டனர். (ஐ-10)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு முன்னணி உதவி

மாங்குளம், டிசெ. 01

வெள்ளத்தால் மாங்குளம் புதிய கொலனியிலிருந்து இடம்பெயர்ந்து பாடசாலையில் தங்கியுள்ள 37 குடும்பங்களை பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நேரில் பார்வையிட்டார்.

இதன்போது, அந்த மக்களுக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரால் ஒருதொகுதி உலருணவுப் பொருட்களும் 5 தறப்பாள்களும் கிராமசேவையாளரிடம் வழங்கிவைக்கப்பட்டன.

கட்சியின் மாங்குளம் பிரதேச அமைப்பாளர் பிறேம், பிரதேச சபை உறுப்பினர் சுயாத்தன், கட்சியின் செயலாளர் ஆகியோரும் இதன்போது உடனிருந்தனர். (ஐ)

# வடக்கில் 51 குளங்கள் வான் பாயும் நிலையில்

### வடக்கு நீர்ப்பாசன திணைக்களம்

கிளிநொச்சி, டிசெ. 01

வடக்கு மாகாண நீர்ப்பாசன திணைக்களத்தின் ஆளுகைக்கு உட்பட்ட 54 மிகப்பெரிய மற்றும் நடுத்தர நீர்ப்பாசன திட்டங்களில் 51 குளங்கள் வான் பாயும் நிலையில் காணப்படுவதுடன், ஒரு குளம் 75 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான நீர் கொள்ளளவை எட்டியுள்ளது.

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் நீர்மட்டம் பாதுகாப்பான நிலையில் உள்ளது. எனினும், தாழ்நிலப் பகுதிகளில் வசிப்போர் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களில் நீர் நிலைகளில் நீர்மட்டம் அதிகரித்து, வான் பாய்ந்துள்ளது. இதனால், குறித்த மாவட்டங்களில் போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டுள்ளதாக அந்தந்த மாவட்ட அனர்த்த முகாமைத்துவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மன்னார் கட்டுக்கரை குளத்தின் வான் நீர் வரத்து அதிகரித்துக் காணப்படுவதோடு வான் பகுதி பாதிப்படையும் ஆபத்து இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், அதிக மழைவீழ்ச்சி காரணமாக வவுனியா மாவட்டத்திலுள்ள பம்பைமடு, வவுனியா குளம், மகாகச்ச கொடிய குளம் ஆகியவற்றின் தடுப்பணைகள் உடைப்பெடுத்துள்ளன.

அத்துடன், முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள முத்துஐயன் கட்டு குளத்தின் வான் பாதையிலுள்ள தடுப்பணைகள் உடைப்பெடுத்துள்ளதாக வட மாகாண நீர்ப்பாசன திணைக்களம் அறிவித்துள்ளது.

இதேவேளை, குளங்களின் உடைப்பைத் தடுக்கும் நோக்கில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக வவுனியா மாவட்டத்திலுள்ள கல்மடு, பெரியதம்பனை, அலியாமருதமடு, கனகராயன்குளம் ஆகியவற்றிலும், மன்னார் மாவட்டத்திலுள்ள பெரியமடு குளத்திலும், கிளிநொச்சியிலுள்ள புழுதியாறு, முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள வவுனிக்குளம், உடையார்கட்டு, தட்டயர்மலை ஆகிய குளங்களின் வால்கட்டுப் பகுதிகள் வெட்டப்பட்டு நீர்மட்டம் குறைக்கப்பட்டு வருவதுடன், குளங்களின் பாதுகாப்பு தொடர்பான தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதேவேளை, யாழ். மாவட்டத்தின் தொண்டைமானாறு, அரியாலை மற்றும் அராலி ஆகிய உவர்நீர்த்தடுப்பணைகளை ஏனைய கடல் மட்டமானது 3 அடி 6 அங்குலம் வரை உயர்ந்துள்ளதால், தடுப்பணை கதவுகளைத் திறந்து நீரை வெளியேற்ற முடியாத நிலை காணப்படுவதாக, வட மாகாண நீர்ப்பாசன திணைக்களம் அறிவித்துள்ளது. (ஐ)

# வடமராட்சி கிழக்கில் கால்நடைகள் இறப்பு

வடமராட்சி, டிசெ. 01

நிலவும் சீரற்ற காலநிலையால் வடமராட்சி கிழக்கு - புன்னையடி பகுதியில் கால்நடைகள் இறந்து கிடக்கின்றன.

இறந்து கிடக்கும் கால்நடைகளை அகற்றும் பணிகளை உடனடியாக பருத்தித்துறை பிரதேச சபை மேற்கொண்டு வருகின்றனர்.

கால்நடைகள் உயிரிழந்தமைக்கான காரணம் தெரியவரவில்லை. (ஐ-05-08)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
01.12.2023 திங்கட்கிழமை
விசுவாவசு வருடம், கார்த்திகை 15

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
– யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**

# உடன் வரும் இந்தியா

இந்தியா தொடர்பில் என்னதான் பேசிக் கொண்டாலும்கூட, நெருக்கடியென்று வருகின்றபோது இந்தியாதான் முதலில் வருகிறது. ஏன் இந்தியா மட்டும் முதலில்? அதுதான் இலங்கையின் அமைவிட யதார்த்தம். கூப்பிட்டாலும் வரும் - கூப்பிடாவிட்டாலும் வரும் வெளிநாடு ஒன்று இருக்கிறது என்றால் - அதுதான் இந்தியா. ஒரு காலத்தில் “ஒப்ரேஷன் பூமாலை” இப்போது “ஒப்ரேஷன் சாகர் பந்து”. ஒப்ரேஷன் பூமாலை தொடர்பில் நெருடலான அனுபவம் இலங்கையர்களுக்கு உண்டு. ஏனெனில், அது அரசியல். இந்திய அமைதிப் படை காலத்து கதைகள் பற்றி இப்போதும் பேசுவோர் உண்டு. தமிழர் பக்கத்தில் இருப்பதுபோன்று சிங்களவர் பக்கத்திலும் கதைகள் உண்டு. ஆனால், நம்மிருவர் பக்கத்தில் கதைகள் இருப்பதுபோன்று இந்தியப் பக்கத்திலும் கதைகள் உண்டு. கதைகளை கூறிக்கொண்டிருப்பதால் இனி ஆகப்போவது ஒன்றுமில்லை.

ஆனால், ஒரு நாட்டின் அமைவிட யதார்த்தத்தை முன்வைத்துத்தான் நாம் சிந்திக்க வேண்டும். சில அரசியல் யதார்த்தங்களில் நமது விருப்பு - வெறுப்புகளுக்கு எவ்வித பெறுமதியும் இல்லை. பெறுமதியிருப்பதாக எண்ணிக் கொள்வது நமது கற்பனை. இந்த சூறாவளி கதைகள் இன்னும் சில மாதங்களில் ஓய்ந்துவிடும். பொருளாதார நெருக்கடி கதைகள் எப்படி ஓய்ந்துபோனதோ அப்படி.

பொருளாதார நெருக்கடி ஓரளவு ஓய்ந்து போனதும் மீண்டும்அரசியல் கதைகளே மேலாதிக்கம் பெற்றன. அப்படித்தான் இன்றைய பேரழிவுக் கதைகள் ஓய்ந்ததும் மீண்டும் அரசியல் கதைகளே நமது அரசியல் மேற்பரப்பை ஆக்கிரமிக்கும். அப்போது, மீண்டும் மாகாண சபைகள் தேர்தல், பதின்மூன்று தொடர்பான உரையாடல்கள் அரசியல் பேசுபொருளாகும். மாகாண சபைகள் இன்றுவரையில் பல இழுபறிகளுக்கு மத்தியிலும் இருப்பதற்கு காரணம் - ஒன்றே ஒன்றுதான். அது, இந்தியா மட்டும்தான்.

மாகாண சபைகளை நீக்குவது உங்களின் உள்விவகாரம் - நீங்கள் விரும்புவதை செய்யுங்கள் என்று ஒரு வார்த்தை இந்திய பக்கத்திலிருந்து தலைநீட்டினால் அடுத்த மாதமே பதின்மூன்றை இல்லாமலாக்கும் யோசனையை ஆட்சியாளர்கள் முன்வைப்பர். அத்துடன், தமிழ் மக்களுக்கு இருக்கின்ற ஒரேயொரு வாய்ப்பும் நழுவிவிடும். ஈழத் தமிழர் அரசியலில் இந்தியா தொடர்பில் என்னதான் பேசினாலும் இறுதியில் இந்தியா ஒன்றுதான் அரசியல் அடைக்கலம். இந்தியா இல்லாவிட்டால் ஈழத் தமிழர்களுக்கான அரசியல் என்பதும் வெறும் முகநூல் கதைகளாகவே சுருங்கிப் போகும் - இல்லாவிட்டால் கொழும்புடன் முழுமையாக கரைந்து போகவேண்டும். கரைந்து போகத் தயாரென்றால் இது பற்றிய உரையாடல்கள் தேவைப்படாது.

இலங்கையுடனான இணைப்புத் திட்டங்கள் தொடர்பில் இந்தியா தொடர்ந்தும் ஆர்வம் கொண்டிருக்கிறது. பல திட்டங்கள் கலந்துரையாடலில் இருக்கின்றன. ஆனாலும், சில திட்டங்கள் அச்சத்துடன் நோக்கப்படுவதான தோற்றம் தெரிகிறது. உதாரணமாக இரு நாடுகளுக்கும் இடையில் பாலம் அமைக்கும் திட்டம். திருகோணமலைக்கும் தென்னிந்தியாவுக்கும் இடையிலான எண்ணெய் குழாய் பொருத்தும் திட்டம். இவ்வாறான திட்டங்கள் சாத்தியம்தானா அல்லது பேச்சளவில் மட்டும்தானா என்னும் கேள்விகள் உண்டு. ஆனால், இலங்கையின் தேவைகள் அவ்வாறான திட்டங்களை நோக்கிச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தங்களை ஒரு காலத்தில் ஏற்படுத்தும். ஏனெனில், இலங்கைக்கு மிகவும் அருகில் இருக்கும் ஒரு பிரமாண்டமான நாடு, அதிலும் உலகின் முதல் மூன்று பெரும் பொருளாதார சக்திகளில் ஒன்றாக எழுச்சியுற்றுவரும் நாடு என்னும் வகையில் கொழும்பு விரும்புவது போன்று அதிக காலத்துக்குக் கள்ளன் - பொலிஸ் விளையாட்டு விளையாடிக் கொண்டிருக்க முடியாது. இந்தியாவை தெரிவு செய்ய வேண்டியது விருப்பு - வெறுப்புகள் கடந்த ஒரு விடயம். இதனை ஆரம்பத்திலேயே புரிந்து கொள்ளத் தவறியதால்தான் ஈழத் தமிழர்கள் கொடுக்கக்கூடாத விலையைக் கொடுத்து அரசியல் கையறுநிலையில் நிற்கின்றனர்.

# “வலி. கிழக்கு பிரதேச சபை எல்லைக்குள் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி தேவை”

*யாழ்ப்பாணம், டிசெ. 01*

வலிகாமம் கிழக்கு பிரதேச சபை எல்லைக்குள் அதிக வெள்ளப்பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ள நிலையில் குறித்த பகுதிக்கு உடனடி உணவு உதவிகள் தேவையாகவுள்ளன என்று தவிசாளர் தி. நிரோஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.

எமது பிரதேசம் பொதுவாக வசதிகுறைவான மக்களைக்கொண்ட பகுதியாகும். குறிப்பாக ஒவ்வொரு கிராமங்களின் ஐம்பது சதவீதமான பகுதிகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. அரசாங்கம் முகாம்களுக்குச் செல்வோருக்கே உடனடி உதவி என்ற சுற்று நிருபத்தை வெளியிட்டிருந்தது.

இதன் வாயிலாக வீடுகளுக்குள் கடும் வெள்ளப்பாதிப்புக்களை எதிர்கொண்டு முடக்கப்பட்டுள்ள மக்கள் உணவுக்குத் திண்டாடும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் முகாம்களுக்கு செல்ல முடியாதவர்களுக்கு உதவிகள் கிட்டவில்லை.

எமது பிரதேசத்தில் ஏற்கனவே பலருக்கும் ஒருவகை வைரஸ் காய்ச்சல் உள்ள நிலையில் முகாம்களுக்குள் செல்லவதை மக்களில் பலரும் விரும்பவில்லை. இந்த நிலையில், வீடுகளுக்குள் வெள்ள நீர்புகுந்து கடும் பாதிப்புக்களை எதிர்கொண்டு பலரும் திண்டாடுகின்றார்கள். - என்றார். (எ)

# அதிகளவான மழைவீழ்ச்சி கிளிநொச்சியில் பதிவானது

*கிளிநொச்சி, டிசெ. 01*

நேற்றுக்காலை 09 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணித்தியாலங்களில் அதிகளவான மழைவீழ்ச்சி கிளிநொச்சி மாவட்டத்தின் பொக்கணியில் பதிவானது. இதன்படி, அந்தப் பகுதியில் 274 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

குறிப்பிடத்தக்களவான மழைவீழ்ச்சி பதிவாகியுள்ள பிற மாவட்டங்கள் பின்வருமாறு:
மன்னார் - பொற்கேணி - 210 மில்லி மீற்றர்,
மன்னார் - மடு - 193 மில்லி மீற்றர்,
கேகாலை - துனுமல்லே பகுதி - 181 மில்லி மீற்றர்,
கம்பஹா - கிரிந்திவலை, - 121 மில்லி மீற்றர்,
நுவரெலியா - கிலேண்டில்ட் பகுதி - 104 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது. (எ)

# பாதுகாப்பற்ற பகுதிகளை பார்வையிட வேண்டாம்

**பொலிஸார் அறிவுறுத்தல்**

*கொழும்பு, டிசெ. 01*

நாட்டில் நிலவி வரும் சீரற்ற வானிலை காரணமாக சேதமடைந்த, அனைத்து வீதிகள் மற்றும் பாலங்களை உடனடியாக புனரமைப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும், வீதி மேம்பாட்டு ஆணையம் ஆரம்பித்துள்ளது

இந்த நிலையில் சேதமடைந்த பகுதிகளை பார்வையிட பொதுமக்கள் அதிகளவில் வருகின்றனர். இது மிகவும் பாதுகாப்பற்றது என்பதால், சேதமடைந்த பாலங்கள், வீதிகள் மற்றும் பிற பாதுகாப்பற்ற பகுதிகளை பார்வையிட வேண்டாம் என பொலிஸார் பொதுமக்களை கேட்டுக் கொண்டுள்ளனர்.(எ)

# தண்ணீரை சிக்கனமாகவும் கொதிக்கவைத்தும் பாவிக்குக

**தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை**


*கிளிநொச்சி, டிசெ. 01*

கிளிநொச்சி மாவட்டத்தில் சீரான குடிதண்ணீர் விநியோக நடவடிக்கையை மேற்கொள்வதில் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் பொது மக்கள் தண்ணீரை சிக்கனமாகவும், கொதிக்கவைத்தும் பயன்படுத்துமாறும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையினர் அறிவித்துள்ளனர்.

தற்போது ஏற்பட்ட காலநிலை அனர்த்தம் காரணமாக கிளிநொச்சி குளத்தின் நீர் என்றுமில்லாத அளவுக்கு மிகவும் அதிகரித்த கலங்கல் தன்மையுடன் காணப்படுவதனால் தண்ணீரை சுத்திகரித்து விநியோகிப்பதில் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

அவ்வப்போது ஏற்படுகின்ற மின்சார தடையும் தண்ணீர் விநியோகத்தில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இருப்பினும், இயன்றளவு நீரை சுத்திகரித்து வழங்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
ஆனாலும், அவை மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே காணப்படும். எனவே, பொது மக்கள் நீரை சிக்கனமாகவும் கொதிக்கவைத்தும் பயன்படுத்துமாறு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது. (ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிசம்பர் - 01 திங்கட்கிழமை
விசுவாவசு வருடம் - கார்த்திகை 15
நல்ல நேரம் : 06.15 - 07.10
ராகு காலம் : 07.30 - 09.00
திதி : திதித்துவயம்

## இன்றைய ராசிபலன்

**மேடம்**
குடும்பத்தைப் பற்றிய கவலைகள் வந்து நீங்கும். சகோதர வகையில் ஆரோக்யமான விவாதங்கள் வரப்படும். வியாபாரத்தில் பாக்கிகளை வசூலிக்கப் பாருங்கள். நிதானம் தேவைப்படும் நாள்.

**இடபம்**
குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். புதுவேலை கிடைக்கும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் ரசனையைப் புரிந்துக் கொள்வீர்கள். திறமைகள் வெளிப்படும்.

**மிதுனம்**
உங்களின் அணுகுமுறையை மற்றவர்களின் ரசனைக்கேற்ப மாற்றியமைத்துக் கொள்வீர்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும்.

**கடகம்**
குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். பிரச்னைகளுக்கு தீர்வு காண்பீர்கள். உடல் நலம் சீராகும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் திருப்தி கரமாக சூழ்நிலை உருவாகும்.

**சிம்மம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் பழைய பிரச்னைகள் இணைத்துப் பார்த்து கோபப்பட்டு கொண்டிருக்காதீர்கள். சக ஊழியர்களின் கடிந்து கொள்ளாதீர்கள். விழிப்புடண் செயல்பட வேண்டியநாள்.

**கன்னி**
பிள்ளைகளை புதிய பாதையில் வழி நடத்துவீர்கள். வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் சில சூட்சுமங்களை புரிந்துக் கொள்வீர்கள். புது பொறுப்புகள் தேடி வரும். நன்மை கிட்டும் நாள்.

**துலாம்**
குடும்பத்தில் உள்ள உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். வெளிவட்டாரத்தில் புதியவர்கள் நண்பர்களாவார்கள். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். சவாலான வேலைகளையும் முடிப்பீர்கள்.

**விருட்சிகம்**
புதிய திட்டங்கள் நிறைவேறும். பிள்ளைகள் நம்பிக்கை தருவார்கள். நட்பால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் எதிர்பார்த்த ஒப்பந்தம் உங்களுக்குக் கிடைக்கும். புதுமை படைக்கும் நாள்.

**தனுசு**
பால்ய நண்பர்கள் தேடி வந்து பேசுவார்கள். தாய்வழி உறவினர்களால் அலைச்சல் ஏற்படும். வியாபாரத்தில் அதிரடியான போட்டிகளை சமாளிப்பீர்கள். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

**மகரம்**
துணிச்சலாக சில முடிவுகள் எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்கள் உறுதுணையாக இருப்பார்கள். வியாபாரத்தில் விஜபிகள் வாடிக்கையாளர்கள் ஆவார்கள். அதிகாரிகள் முன்னுரிமை தருவார்கள்.

**கும்பம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். உறவினர்கள் ஒத்துழைப்பார்கள். வியாபாரத்தில் பழைய பாக்கிகள் வசூலாகும். புது அதிகாரி உங்களை மதிப்பார். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**மீனம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் உங்களை அறியாமலேயே ஒருவித படபடப்பு தாழ்வுமனப்பான்மை வந்து செல்லும். அதிகாரி தவறு களை சுட்டிக்காட்டினால் மாற்றிக் கொள்வது நல்லது.

# யாழ். பல்கலையில் பகிடிவதை: 19 மாணவர்கள் விளக்கமறியலில்

யாழ்ப்பாணம், டிசெ. 01

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிகபீட மாணவர்கள் 19 பேர் பகிடிவதை புரிந்தனர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 21ஆம் திகதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்தில் கல்வி பயிலும் சிரேஷ்ட மாணவர்கள், அதே பீடத்தில் கல்வி பயிலும் கனிஷ்ட மாணவர்கள் 15 பேரை வீடொன்றுக்கு அழைத்துச் சென்று தாக்குதல் நடத்தி பகிடிவதையில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட தரப்பினரால் கோப்பாய் பொலிஸ் நிலையத்துக்கு முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

சம்பவம் குறித்து விசாரணைகளை ஆரம்பித்த பொலிஸார் 19 மாணவர்களை அடையாளம் கண்டு கைது செய்தனர்.

கைதான 19 மாணவர்களும் யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட நிலையில், அனைவரையும் நாளை மறுதினம் 3ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உசைன் உத்தரவிட்டார்.

(எ-03)

# மன்னாரில் வெள்ளம்: ஆயிரக்கணக்கான கால்நடைகள் அடித்து செல்லப்பட்டன

### கால்நடை வளர்ப்போர் வாழ்வாதாரம் பாதிப்பு

மன்னார், டிசெ. 01

மன்னார் மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் ஆயிரக்கணக்கான கால்நடைகள் நீரில் அடித்துச் செல்லப்பட்டன.

நானாட்டான், மடு, மாந்தை மேற்கு ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் ஆடு, மாடு உள்ளடங்களாக ஆயிரக்கணக்கான கால்நடைகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன.

குறிப்பாக நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள ஆயிரக்கணக்கான கால்நடைகள் வெள்ளநீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளதாக கால்நடை வளர்ப்பாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

அவர்களால் இயன்றளவுக்கு கால் நடைகளை காப்பாற்றி படகில் ஏற்றி கரைக்கு கொண்டு வந்து காப்பாற்றியுள்ளனர்.

மேலும், மன்னார் மாவட்டத்தின் பல பகுதிகளில் வெள்ளநீர் தேங்கி நிற்பதோடு பிரதான வீதிகள் மூழ்கியுள்ளன.

இதனால் மன்னார் - யாழ்ப்பாணம் பிரதான வீதி, மன்னார் - மதவாச்சி பிரதான வீதிகளின் போக்குவரத்துகள் தடைப்பட்டுள்ளன. மேலும் மடு, மாந்தை மேற்கு, நானாட்டான், முசலி ஆகிய பகுதிகளிலுள்ள வீதிகளும் வெள்ளத்தில் மூழ்கின.

இதனால் மக்களின் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

# நோய்கள் ஏற்படும் அபாயத்தை குறைக்க வேண்டியது அவசியம்

### யாழ். போதனா மருத்துவமனை பணிப்பாளர்

யாழ்ப்பாணம், டிசெ. 01

வெள்ள அனர்த்தத்தின் பின்னர் நோய்களில் சிக்கிக் கொள்வதைத் தவிர்த்துக் கொள்ளுதல் தொடர்பில் யாழ். போதனா மருத்துவமனை பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

அதில், அண்மைய நாட்களில் பெய்த மழை காரணமாக பல்வேறு சிக்கலான நிலைகள் உருவாகியுள்ளன. குறிப்பாக தொற்று நோய்கள் ஏற்படும் அபாயம் காணப்படுகிறது.

மழைநீர் பல்வேறு வாழ்விடங்களில் புகுந்ததன் காரணமாக லெப்டோஸ்பைரோசிஸ் நோய் ஏற்படும் வாய்ப்பு உள்ளது. மேலும், தோல் வியாதிகள், சுவாசத் தொற்றுகள், வயிற்றோட்டம் போன்ற நோய்களும் ஏற்படலாம்.

ஆகவே, கீழ்வரும் நடைமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும்:

ஷஅசுத்தமான நீரில் நடைபயணம் செய்த பிறகு, அல்லது அந்த பகுதிகளில் சென்று வந்தால், சவர்க்காரம் பயன்படுத்தி கை, கால் உள்ளிட்ட உடல் பகுதிகளை நன்றாகக் கழுவ வேண்டும்.

சுத்தமான குடிநீரைப் பருக வேண்டும். கொதிக்க வைத்த நீரைப் பருகுவது சிறந்தது.

வாழ்விடங்களை எப்போதும் தூய்மையாக பேண வேண்டும். சுகாதாரமற்ற உணவுகளைத் தவிர்க்க வேண்டும். உடல் நலத்தில் கவனம் செலுத்தி, நோய்கள் ஏற்படும் அபாயத்தை குறைக்க வேண்டியது அவசியம்.

மருத்துவ சிகிச்சை தேவைப்படும் போது தாமதமின்றி மருத்துவமனைக்கு செல்ல வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

(எ- 03)

# வல்வெட்டித்துறை ஆதிகோவிலடியில் படகுகள் சேதம்

யாழ்ப்பாணம், டிசெ. 01

வல்வெட்டித்துறை- ஆதிகோவிலடி பகுதியில் வீசிய புயல் காற்றால் பல படகுகள் பாறைகளில் மோதி சேதமடைந்துள்ளதுடன் பலரது வலைகள் மற்றும் கடற்றொழில் உபகரணங்களும் கடலுக்குள் இழுத்துச் செல்லப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட மீனவர்கள் தமது படகுகளை மீட்டெடுப்பதிலும் காணாமல் போன வலைகள் மற்றும் கடற்றொழில் உபகரணங்களை தேடும் பணியிலும் ஈடுபட்டுள்ளனர். (எ)

# பலாலி பொலிஸ் நிலையத்துக்குள் வெள்ளம் புகுந்ததால் கடும் சிரமம்



யாழ்ப்பாணம், டிசெ. 01

நாட்டில் நிலவிவரும் சீரற்ற காலநிலையால் பாதுகாப்பு படைகளின் முகாம்கள் மற்றும் அலுவலகங்களும் பாதிக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் யாழ்ப்பாணம், பலாலி பொலிஸ் நிலையத்துக்குள் வெள்ளம் புகுந்ததால் பொலிஸார் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

வெள்ளத்தை வெளியேற்ற முடியாத நிலை காணப்படுவதுடன் தொடர்ச்சியாக மழையும் பெய்துவருவதால் பொலிஸாரின் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளதோடு, பெரும் சிரமங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

யாழ். பலாலி பகுதியில் அதிகளவான இடங்களில் வெள்ளம் தேங்கி காணப்படுவதால் அப்பகுதியில் போக்குவரத்தும் தடைப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடைப்பெடுத்தது மாவிலாறு; தாழ்நிலங்கள் வெள்ளத்தில்!

## மீட்பு பணிகளில் ஹெலிகள்

திருகோணமலை, டிசெ. 01

**மாவிலாறு குளத்தின் அணை உடைப்பெடுத்ததால் அதன் கீழுள்ள பகுதிகளிலிருந்து மக்கள் வெளியேற்றப்பட்டனர்.**

இதேநேரம், இலங்கை விமானப் படையின் ஹெலிகொப்டர்களும் நேற்று மீட்புப் பணியில் ஈடுபட்டிருந்தன.

மாவிலாறு குளக்கட்டு உடைப்பெடுத்தமையால் அதனை அண்டிய வெருகல், ஈச்சிலம்பற்று, மூதூர், சேருவில பிரதேச செயலர் பிரிவுகளின் தாழ்நிலப் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

மகாவலி கங்கையின் நீர்வரத்து தொடர்ச்சியாக அதிகரித்துள்ளது. இதனாலேயே மாவிலாறு அணைக்கட்டு உடைப்பெடுத்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# ஒருங்கிணைந்து செயல்படுவதன்மூலம் பாதிக்கப்பட்டோருக்கு நன்மை கிட்டும்

## ஜனாதிபதி அநுர குமார

கொழும்பு, டிசெ. 01

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதில் அனைத்துத் தரப்பினருடனும் சிறந்த ஒருங்கிணைப்புடன் செயல்படுவதன் மூலம் அந்த நன்மைகளை மக்களுக்கு மிகவும் பயனுள்ள தாகவும் செயல்திறனுடனும் வழங்க முடியும் என்று ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு முப்படை பாதுகாப்பு தலைமையகத்தில் அரச சார்பற்ற அமைப்புகளின் பிரதிநிதிகளுடனான சந்திப்பில் கலந்து கொண்ட போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இந்தக் கடினமான நிலைமையில் மக்களுக்காக முன்வந்துள்ள அனைவருக்கும் நன்றி தெரிவித்த ஜனாதிபதி, தேசிய வேலைத் திட்டத்தின் மூலம் நன்கு ஒருங்கிணைந்து பணியாற்றி, மனச்சாட்சிப்படி எதிர்பார்க்கப்படும் இலக்குகளை அடைய அர்ப்பணிப்புடன் செயல்படுவோம் என்று அனைவரிடமும் கேட்டுக்கொண்டார்.

மேலும், எந்தவித பாகுபாடும் இன்றி பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் தேவையான வசதிகளை வழங்கி அவர்களின் உயிர்களுக்கு மதிப்பு கொடுத்து, மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் செயல்படுத்தப் பட்டுள்ளன என்றுசுட்டிக்காட்டிய ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க, இந்த கடினமான நிலைமை, நாட்டில் தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான வேலைத் திட்டத்துக்கு ஒரு முன்னுதாரணமாக அமைந்துள்ளது - என்றும் கூறினார். (ஐ)

# கம்பளையில் 19 சடலங்கள் மீட்பு 44 பேரை இன்னமும் காணவில்லை

கொழும்பு, டிசெ. 01

கண்டியின் கம்பளை பிரதேச செயலர் பிரிவில் இதுவரை 19 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன என்று பிரதேச செயலாளர் ஆத்மா தில்ருக்ஷி தெரிவித்துள்ளார்.

அத்துடன், 44 பேர் இதுவரை காணாமல் போயுள்ளனர். இடம்பெயர்ந்த மக்கள் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இதனால், யாரும் தேவையற்ற அச்சத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டாம் என்றும் அவர் மேலும் கூறினார். (ஐ)

# கேகாலையில் மண்சரிவு; நால்வரை காணவில்லை

கொழும்பு, டிசெ. 01

கேகாலையில் நேற்று முன்தினம் இரவு ஏற்பட்ட மண்சரிவில் சிக்கி நால்வர் காணாமல் போயினர்.

கேகாலை - மாவனெல்லை - கோவிலகந்தை பகுதியிலேயே இந்த அனர்த்தம் ஏற்பட்டதாக அந்தப் பகுதியின் பிரதேச செயலாளர் திலிப் நிஷாந்த தெரிவித்தார்.

நாட்டில் நிலவும் சூழ்நிலை காரணமாக இந்தப் பகுதியில் உள்ள மக்கள் வெளியேற்றப்பட்டனர். இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு வீடு திரும்பிக் கொண்டிருந்த நால்வரே நிலச்சரிவில் சிக்கிக் காணாமல் போயினர் என்று தெரிவிக்கப்பட்டது.



# காரைதீவுக்குள் புகுந்தது கடல்நீர்

காரைதீவு, டிசெ. 01

அம்பாறை மாவட்டத்தின் கரையோரத்திலுள்ள காரைதீவு கிராமத்துக்குள் கடல்நீர் உட்புகுந்துள்ளது. அங்குள்ள சுனாமி, திருவாதிரை நினைவுத்தூபிகளை கடல் உள்வாங்கியுள்ளன. அத்துடன், காரைதீவு பிரதேச சபைக்கு சொந்தமான கடற்கரை பூங்கா மதிலும் கடல் அலைகளால் தாக்கப்படும் அபாயம் உள்ளது.

மேலும், வெள்ளத்தில் குளவெளி, கண்ணகி கிராமம் கூடதலாக பாதிக்கப்பட்டுள்ளன. அங்குள்ள, மக்கள் இடம்பெயர்ந்துள்ள நிலையில் அரசின் உதவிகள் அவர்களை சென்றடையவில்லை. (ஐ)

# பாதிக்கப்பட்டோருக்கு உதவ 3 வட்ஸ்அப் இலக்கங்கள்!

கொழும்பு, டிசெ. 01

நாட்டில் நிலவும் அனர்த்த சூழ்நிலையால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் தமது பிரச்னைகள் - தேவைகளை பூர்த்தி செய்ய 3 வட்ஸ்-அப் இலக்கங்களை அனர்த்த முகாமைத்துவ நிலையம் அறிமுகப்படுத்தியுள்ளது.

070 411 7117, 078 411 7117, 077 411 7117 ஆகிய வட்ஸ்அப் இலக்கங்கள் மூலம் பாதிக்கப்பட்டவர்கள் தமது அவசர நிலைமைகள் - தேவைகள் குறித்த தகவல்களை அனர்த்த முகாமைத்துவ நிலையத்துடன் தொடர்புகொண்டு வழங்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# பாதிக்கப்பட்ட சுற்றுலாவிகளுக்கு விசேட ஆதரவு திட்டங்கள் அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 01

நாட்டில் நிலவும் மோசமான வானிலையால் பாதிக்கப்பட்ட சுற்றுலா பயணிகளுக்கு அரசாங்கம் விசேட ஆதரவு திட்டங்களை அறிவித்துள்ளது.

இந்த காலகட்டத்தில் வீசா காலாவதியான சுற்றுலா பயணிகள் எவ்வித அபராதமும் இன்றி இலவச வீசா நீடிப்பு வழங்கப்படும். அத்துடன், விமான சேவைகள் இரத்து கட்டணங்கள் மற்றும் திகதி திருத்த கட்டணங்களுக்கு விலக்கு அளிக்கப்படவுள்ளன. பயணத் திட்டங்களை மாற்ற வேண்டியவர்களுக்கு மிகுந்த நெகிழ்வான மறுபதிவு வசதி வழங்கப்படும்.

ஷஇந்த சலுகைகளை பெற வானிலை காரணமாக பாதிக்கப்பட்டதைக் குறிப்பிடும் சுய அறிக்கை போதுமானது என வும் கூறப்பட்டுள்ளது.

தற்போது இலங்கையில் தங்கியிருக்கும் சுற்றுலாப் பயணிகள் பாதுகாப்பாக இருந்து, அதிகாரபூர்வ அறிவிப்புகளை பின்பற்றுமாறும் உதவிகள் தேவையானவர்கள் 1912 என்ற இலக்கத்தை தொடர்புகொள்ள முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)



# களனி ஆற்றின் நீர்மட்டம் உயர்வு; ஹன்வெல்ல நகரம் வெள்ளத்தில்!

## நேற்றும் வெள்ளம் குறையவில்லை

கொழும்பு, டிசெ. 01

களனி ஆற்றின் நீர்மட்டம் வெகுவாக உயர்ந்துள்ளது. இதனால், கொழும்பின் ஹன்வெல்ல நகரின் பிரதான பேருந்து நிலையம் மற்றும் வணிக வளாகங்களை சுற்றியுள்ள பல கிராமங்கள் ஏற்கனவே வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

களனி ஆற்றின் நீர்மட்டம் திடீரென அதிகரித்ததால் சீதாவக்கை ஹோமாகமை பிரதேச செயலர் பிரிவுகளில் பல கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. பாதிக்கப்பட்ட குடும்பங்கள் நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

பிரதேச செயலாளர்கள் கிராம அலுவலர்கள் மூலம் முகாம்களில் உள்ள மக்களுக்கு சமைத்த உணவை வழங்கினர்.

வனஹகொட, ஹன்வெல்லை, அட்டிகல்லை, கடுவலை, அம்பத்தலே ஆகிய பகுதிகளில் வெள்ளம் ஏற்பட்டதால், கொழும்பு - அவிசாவளை பழைய சாலை வனகொடவிலிருந்து மூடப்பட்டது.

சீதாவக்கை பிரதேச செயலர் பிரிவின் 51 கிராம அலுவலர் பிரிவுகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டன. வெள்ளத்தில் சிக்கிய மக்கள் படகுகள் மூலம் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

ஹைலெவெல்ல வீதியில் உள்ள கலுஅக்கல, வனஹகொட, பஹத்கம, ஹன்வெல்ல, அட்டிகல்லை ஆகிய பகுதிகளில் வெள்ளம் நேற்று காலைவரை குறையவில்லை. ஹன்வெல்ல பொலிஸ் நிலையத்தின் ஒரு பகுதியும் வெள்ளத்தில் மூழ்கியது. (ஐ)

# மண்சரிவில் சிக்கிய சுற்றுலாவிகள் மீட்பு

கொழும்பு, டிசெ. 01

பதுளை - வெலிமடையில் மண்சரிவில் சிக்கிய 3 வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் மீட்கப்பட்டனர் என்று இராணுவம் தெரிவித்துள்ளது.

நேற்று நள்ளிரவுக்கு பின்னர், மண்சரிவில் சிலர் சிக்கியுள்ளனர் என்று பிரதேசவாசிகளால் அறிவித்தமையைத் தொடர்ந்தே இந்த மூவரும் மீட்கப்பட்டனர்.

மெக்சிக்கோவை சேர்ந்த ஒருவர், ஆர்ஜென்ரீனாவை சேர்ந்த இருவரே இவ்வாறு மீட்கப்பட்டனர். அவர்கள், பாதுகாப்பான இடம் ஒன்றில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இதனிடையே, அந்தப் பகுதி முழுவதும் கனமழை மற்றும் நிலையற்ற தரை நிலைமைகள் நீடிப்பதால் அவசரகால குழுக்கள் தொடர்ந்து அப்பகுதியை கண்காணித்து வருகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# முதியோர் காப்பகத்தில் 11 முதியவர்கள் மரணம்

கொழும்பு, டிசெ. 01

குருநாகல் மாவட்டத்தில் வெள்ளத்தால் முதியோர் பராமரிப்பு இல்லமொன்றில் 11 பேர் உயிரிழந்தனர்.

பன்னாலை பகுதியில் அமைந்திருந்த முதியோர் பராமரிப்பு இல்லமொன்றிலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது, 14 முதியவர்களை தாம் மீட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். அத்துடன், அந்த வீட்டில் 25 முதியவர்கள் வசித்து வந்தனர் என்று கூறப்படுகிறது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# உலர் உணவுக்காக வழங்கப்படும் தொகையை அதிகரிக்கத் திட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 01

உலர் உணவுப் பொருட்க ளுக்காக தனிநபருக்கு வாரத் துக்கு வழங்கப்பட்ட 1800 ரூபாயை, 2100 ரூபாய் வரையும் ஐந்து பேர் கொண்ட குடும்பத் துக்கு வழங்கப்பட்ட 3,600 ரூபாயை 10, 500 ரூபாய் வரை யும் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தேசிய பேரிடர் நிவாரண சேவை மையத் தின் உதவிச் செயலாளர் ஜெய திஸ்ஸ முணசிங்க தெரிவித்தார்.

பிரதேச செயலாளர்கள் மற் றும் மாவட்ட செயலாளர்கள் இந்த வரம்புக்கு உட்பட்டு உலர் உணவுப் பொருட்களை வழங்க முடியும் எனவும் அவர் கூறினார்.

நாட்டில் நிலவும் பொருளா தார நிலைகளுக்கு ஏற்ப நிவா ரண சேவைகளை வழங்குவதற் கான விலைகள் இவ்வாறு திருத் தப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக் காட்டினார். (எ)

# 50 குடும்பங்களை சேர்ந்த ஒரு கிராமமே மாயம்!

கண்டி, டிசெ. 01

கண்டி - மாத்தளை வீதியில் உள்ள அலவத்துகொடையின் ரம்புக்கெல பிரதேசத்தில் நேற்று முன்தினம் அதிகாலை ஒரு மணி யளவில் பாரிய நிலச்சரிவு ஏற் பட்டுள்ளது. அங்கும்புர - அல வத்துகொடை வீதியில் ஏற்பட்ட இந்த அனர்த்தத்தால் கிராமத் தின் பெரும்பகுதி பாதிக்கப்பட் டுள்ளது. சுமார் 50 குடும்பங்க ளைச் சேர்ந்த ஒரு கிராமமே மண் சரிவுக்குள் அகப்பட்டு காணாமல் போயிருக்கிறது. இதுவரை இந்த அனர்த்தத்தில் சிக்கி உயிரிழந்த 10 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டன. (எ)

# "தவறான தகவல்களை யாரும் பரப்ப வேண்டாம்"

கொழும்பு, டிசெ. 01

களனி ஆற்றின் வலது கரை வெள்ளத் தடுப்பு அணை உடை யும் அபாயம் உள்ளதாக கூறி சமூக ஊடகங்களில் பரவி வரும் செய்தி முற்றிலும் தவறானது என்று நீர்ப்பாசன துறை தெரி வித்துள்ளது.

ஷமோசமான வானிலை நில வும் இந்த நேரத்தில், இதுபோன்ற தவறான தகவல்களைப் பரப்ப வேண்டாம் என்றும் தேவை யற்ற பீதியை ஏற்படுத்த வேண் டாம் என்றும் தெரிவிக்கப்பட் டுள்ளது. (எ)

# திருமலை- கிண்ணியாவில் நீரில் மூழ்கிய 2 பாலங்கள்

கிண்ணியா, டிசெ. 01

சீரற்ற கால நிலை தாக்கம் காரணமாக திருகோணமலை, கிண்ணியா குட்டிக்கராச்சி பாலம், குறிஞ்சாக்கேணி பாலங் களின் மேலாக நேற்று முன்தினம் இரவு முதல் வெள்ளம் ஊடறுத் துப் பாயத் தொடங்கியுள்ளது. இதனால், தரைவழிப் போக்கு வரத்து தடைப்பட்ட நிலையி லும் அத்தியாவசிய தேவை கருதி கிண்ணியா- தம்பலகாமம் பிர தான வீதியின் குட்டிக்கராச்சி பாலம் ஊடாக கிண்ணியா நகர சபையின் ஏற்பாட்டில் டிரக்டர் மூலமான போக்குவரத்து இடம் பெற்று வந்தது. இந்த நிலையில், நீர்மட்டம் உயர்வடைந்ததால் போக்குவரத்து தடைப்பட்டுள் ளது. அத்தியாவசிய தேவை ஏற் பட்டால் படகு சேவை இடம் பெறும் எனத் தெரிவிக்கப்பட் டுள்ளது.

இதேவேளை, கரையோ ரங்களை அண்டிய பகுதிகளின் தாழ்நிலங்கள் நீரில் மூழ்கின. இது தொடர்பில் கிண்ணியா நகர சபையின் தவிசாளர் எம். மஹ்தி கூறுகையில், மகாவலி கங்கை வழியாக நீரின் அளவு வெளியேற்றம் அதிகரித்துள்ளது. கண்டல் காடு தீனேறி பகுதியாக வரும் நீர் தற்போது குட்டிக்க ராச்சி பாலத்தை நோக்கி வருவ தனால் வெள்ளம் பரவி வருகி றது. எனவே, பொது மக்கள் தேவையற்ற விதத்தில் பயணம் செய்ய முயற்சிப்பதை தவிர்க்கு மாறு கேட்டுக் கொண்டார். (எ)

பதுளை, நுவரெலியா உள்ளிட்ட

# 11 மாவட்டங்களில் மண்சரிவு அபாய எச்சரிக்கை நீடிப்பு!

கொழும்பு, டிசெ. 01

நிலவும் சீரற்ற வானிலை கார ணமாக 11 மாவட்டங்களில் உள்ள 93 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு வழங்கப்பட்ட மண்சரிவு எச்சரிக்கை அறிவிப்பு களை தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் மேலும் நீடித்துள்ளது.

இதன்படி, பதுளை மாவட் டத்தில் உள்ள ஊவா பரணகம, ஹப்புத்தளை, பண்டாரவளை, ஹாலி எல, பதுளை, லுனுகல, பசறை, மீகஹகிவுல, சொரணத் தொட்ட, வெலிமட, எல்ல, கந் தெகெட்டிய மற்றும் ஹல்து முல்ல ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு மண்சரிவு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கண்டி மாவட் டத்தில் பன்வில, பததும்பர, கங்கை இஹல கோரளை, உடுநு வர, தோலுவ, பூஜாபிட்டிய, மினிபே, கங்கவட கோறளை, அக்குறணை, பஸ்பாகே கோரளை, ஹதரலிய, தபரஹெடும்ப, ஹரிஸ்பத்ஹெதும்ப, உடபலத, குண்டசாலே, யட்டிநுவர, தோல் தொட்ட மற்றும் மெடதும்பர ஆகிய பிரதேச செயலாளர் பிரி வுகளுக்கும் சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கேகாலை மாவட்டத்தில் ரம்புக்கனை, மாவனெல்ல, தெர ணியகல, யட்டியந்தோட்டை, கலிகமுவ, வரக்காபொல, ருவன் வெல்ல, அரநாயக்க, கேகாலை, புலத்கொஹுபிட்டிய மற்றும் தெஹியோவிட்ட ஆகிய பிரதே சங்களுக்கும், பொல்கஹாவெல, அலவ்வ, நாகமால, மாவத்தை, நாகமால ஆகிய பிரதேசங்களுக் கும் மாத்தளை மாவட்டத்தில் வில்கமுவ, அம்பங்கங்க கோரளை, பல்லேபொல, உக்குவெல, நாவுல, லக்கல-பள்ளேகம, யடவத்த, ரத்தோட்ட மற்றும் மாத்தளை, பிபில மற்றும் மெதகொட பிர தேச செயலகப் பிரிவுகளுக்கும் நுவரெலியா மாவட்டத்தில் ஹங்குரன்கெத்த, மதுரத்தை, நுவரெலியா, கிழக்கு கொத் மலை, மேற்கு கொத்மலை, தலவாக்கலை, நோர்வூட், அம் பகமுவ, நில்தண்டஹின்ன மற் றும் வலப்பனை மற்றும் கலவான, குருவிட்ட, கொடகவெல, அய கம, எலபத்த, ஆகிய இடங்க ளுக்கும் சிவப்பு எச்சரிக்கை விடுக் கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

இரத்தினபுரி மாவட்டத்தில் பலாங்கொடை, இம்புல்பே, பெல்மடுல்ல, கிரியெல்ல, இரத் தினபுரி மற்றும் எஹலியகொட பிரதேச செயலாளர் பிரிவுக ளுக்கும், கம்பஹா மாவட்டத் தில் உள்ள அத்தனகல்ல பிரதேச செயலகப் பிரிவுக்கும், கொழும்பு மாவட்டத்தில் உள்ள சீதாவக்க மற்றும் பாதுக்க பிரதேச செய லகப் பிரிவுகளுக்கும் சிவப்பு எச் சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேநேரம், களுத்துறை, காலி, மொனராகலை மற்றும் இரத்தி னபுரி மாவட்டங்களில் உள்ள பல பிரதேச செயலகப் பிரிவுக ளுக்கு இரண்டாம் நிலை மண் சரிவு எச்சரிக்கைகள் விடுக்கப் பட்டுள்ளதாகவும், கொழும்பு, கம்பஹா, ஹம்பாந்தோட்டை மற்றும் மாத்தறை மாவட்டங்க ளில் உள்ள 31 பிரதேச செயல கப் பிரிவுகளுக்கு முதலாம் நிலை மண்சரிவு எச்சரிக்கைகள் விடுக் கப்பட்டுள்ளதாகவும் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது. (எ)

# கடும் மழை வீழ்ச்சி குறைந்தாலும் வெள்ளம், மண்சரிவு ஏற்படக்கூடும்

## வளிமண்டலவியல் திணைக்கள பணிப்பாளர்

கொழும்பு, டிசெ. 01


கடுமையான மழை வீழ்ச்சி தணிந்திருந்தாலும், மத்திய மலைநாட்டின் மின் உற்பத்தி நிலையங்களை அண்டிய பகுதி களில் பெய்த மழைநீர் படிப்ப டியாகக் கீழ் நோக்கி வருவதால், வெள்ள அபாயம் குறித்து நீர்ப் பாசனத் திணைக்களம் விடுக் கும் அறிவிப்புகள் தொடர்பில் தொடர்ந்து அவதானமாக இருக்குமாறு வளிமண்டலவி யல் திணைக்களத்தின் பணிப் பாளர் நாயகம் அத்துல கருணா நாயக்க மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

தற்போது நாடு முழுவதும் மண் அதிக ஈரப்பதத்துடன் காணப்படுவதால், மண்சரிவு ஏற்படும் சாத்தியம் உள்ளது. எனவே, மக்கள் தமது வீடுகளுக் குத் திரும்பும் போது சுற்றுப்பு றச் சூழல் குறித்து அவதானமாக இருக்க வேண்டும்.

திருகோணமலையிலிருந்து காங்கேசன்துறை ஊடாக புத்த ளம் வரையான கடற்பரப்புக ளில் எச்சரிக்கை தொடர்ந்தும் நீடிப்பதால், அந்தப் பகுதிகளில் மீன்பிடி மற்றும் கடற்படை நடவடிக்கைகளில் ஈடுபடுவ தைத் தவிர்க்குமாறு அறிவுறுத் தப்பட்டுள்ளது.

புயலின் நேரடித் தாக்கம் நீங்கியிருந்தாலும், மறைமுகத் தாக்கம் காரணமாகக் காற்றின் வேகம் மணிக்கு 50 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக்கூடும் என்பதோடு, கடல் அலைகள் 2 - 3 மீற்றர் வரை உயரக்கூடும்.

ஷஏனைய கடற்பரப்புகளில் காற்றின் வேகம் குறைவடைந் துள்ளதால், மீன்பிடித் திணைக் களத்துடன் கலந்தாலோசித்து, மீன்பிடி நடவடிக்கைகளை ஆரம்பிப்பது தொடர்பில் தகுந்த முடிவுகளை எடுக்க முடி யும் என பணிப்பாளர் நாயகம் மேலும் தெரிவித்தார். (எ)



# மகாவலி ஆறு பெருக்கெடுத்ததால் மனம்பிட்டி நகரத்துக்கு பாரிய சேதம்

பொலநறுவை, டிசெ. 01

மகாவலி ஆறு பெருக்கெ டுத்ததால் சுமார் ஆறு அடி நீரில் மூழ்கியிருந்த மனம்பிட்டி நகரத்தில் வெள்ளம் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை சற்று வடிந்துள்ளதுடன் மனம்பிட்டி நகரில் உள்ள பல கடைகள் மற் றும் வீடுகள் சேதமடைந்துள் ளன.

இதேவேளை, பொலநறுவை - மட்டக்களப்பு பிரதான வீதி யின் மனம்பிட்டி கல்லேல்ல பகுதி தொடர்ந்து நீரில் மூழ்கி யுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பொலநறுவை, மனம்பிட்டி ரயில் நிலையமும் கடுமையாக சேதமடைந்துள்ளது. மேலும், மனம்பிட்டி நகரில் நிறுத்தப் பட்டிருந்த ஒரு கார், ஒரு ஜீப் மற்றும் பல மோட்டார் சைக் கிள்களும் அடித்துச் செல்லப் பட்டன. (எ)

# அம்பாறையில் மின்சாரம் துண்டிப்பு: சிரமங்களை எதிர்கொள்ளும் மக்கள்

கல்முனை, டிசெ. 01

மின்சாரம் இன்மை காரண மாக பொதுமக்கள் பல்வேறு சிர மங்களை எதிர்கொண்டு வரு கின்றனர்.

அம்பாறை மாவட்டத்தில் பெய்த கனமழை மற்றும் கடும் காற்று காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு உள்ளிட்ட அசாதாரண காலநிலையால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

அதிக மின்வலு கொண்ட மின் கட்டமைப்பில் ஏற்பட்ட பழு தால் இவ்வாறு மாவட்டம் முழு வதும் மின்கட்டமைப்பு பாதிக் கப்பட்டுள்ளதாக மின்சார சபை தெரிவித்துள்ளது.

இதனால் குடிநீர் பற்றாக்குறை, எரிபொருள் தட்டுப்பாடு, இணைய சேவைகள் முடக்கம் என கடந்த 3 தினங்களாக பொது மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். (ஏ-01)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரிடரை...

உயிர்ப்பிக்க முடிந் தால் எந்த சூழ்நிலையிலும் அதைச் செய்வதற்கு நாங்கள் இரு முறை யோசிக்க மாட்டோம். ஆனால், நாம் யதார்த்தத்தின் வேதனையான உண்மையை எதிர்கொள்ள வேண்டும். இறந்த அனைவரின் குடும்பங்களுக்கும் எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அனுதாபத்துடன் மட்டும் நின்றுவிடாமல் அந்த உயிர்களை அந்த குடும்பங்களுக்குத் திரும்பக் கொண்டு வர முடியாவிட்டாலும், ஏனைய அனைத்தையும் வழங்க நாங்கள் அர்ப்பணிப்புடன் செயல்படுவோம். இதேபோன்று, காணாமல் போனவர்கள் அனைவரும் உயிருடன் இருக்கிறார்கள் என்றும் நாங்கள் நம்புகிறோம்.

இயற்கை பேரிடரை முறையாகக் கட்டுப்படுத்த முடியாதபோதும் ஏற்படக்கூடிய அனர்த்தங்கள் மற்றும் அவசர நிலைமைகளை உரிய வகையில் முகாமைத்துவம் செய்தல், பழைய நிலைக்கு அல்லது முன்பை விட சிறந்த நிலைக்கு மீண்டும் கட்டியெழுப்பும் மூன்று செயல்முறைகளின் முக்கியத்துவம் அரசாங்கத்திற்குரியது. அதற்குத் தேவையான - சாத்தியமான நடவடிக்கைகள் எவ்வளவு கடினமாக இருந்தாலும் அதனை மேற்கொள்ள எதிர்பார்க்கிறோம்.

நாம் இதுவரை கண்டிராத மிகப்பெரிய மறுசீரமைப்பு முன்னெடுப்பு மற்றும் மீளக் கட்டியெழுப்பும் பணியை எதிர்கொள்ள வேண்டும். அழிவின் அளவை மதிப்பிடுவது மிகவும் பாரதூரமானது. ஆனால், வெள்ளம், புயல் அல்லது ஏதேனும் பேரழிவுக்குப் பின்னர், நம் நாட்டு மக்களின் முதல் பணியாக பேரிடரால் பாதிக்கப்பட்டவர்களின் உயிரை காப்பாற்றுவதும் அவர்களுக்குத் தேவையான உடனடி நிவாரணத்தை வழங்குவதுமாகவே உள்ளது. அதற்காக, எங்கள் முழு அரச பொறிமுறையையும் மிகவும் திறமையாக வழி நடத்த முயற்சி செய்தோம்.

இந்த மீட்புப் பணியில், நமது அயல் நாடுகளும் நட்பு நாடுகளும் எங்களுக்கு பெருமளவு உதவிகளைச் செய்துள்ளன. நாட்டு மக்கள் சார்பாக நாங்கள் அவர்களுக்கு மிகவும் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம்.

சில சுற்றறிக்கைகள் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதில் தடைகளை ஏற்படுத்தியுள்ளன. அந்த சுற்றறிக்கைகள் அனைத்தையும் நாங்கள் மாற்றியமைத்துள்ளோம். சில சுற்றறிக்கைகள் அதிகாரிகளுக்கு தேவைக்கேற்ப பணத்தை பயன்படுத்துவதற்குத் தடைகளை ஏற்படுத்தியுள்ளன. அந்த சுற்றறிக்கைகளை நாங்கள் மாற்றியுள்ளோம். ஒரு பிரதேச செயலாளருக்கு 5 கோடி ரூபாய் வரை செலவிட அனுமதி அளித்துள்ளோம்.

கடந்த வரவு - செலவுத் திட்டத்தில் நிறைவேற்றப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் 3 ஆயிரம் கோடி ரூபாய் எங்களிடம் உள்ளது. அதை நாங்கள் பாராளுமன்றத்தின் அனுமதி இல்லாமல் செலவிட முடியும். அதனை இந்த செயல்பாட்டுக்காக ஒதுக்கியுள்ளோம். மாவட்ட செயலாளர்களுக்கு எவ்வளவு பணம் தேவையோ அதையெல்லாம் வழங்க தேவையான ஏற்பாடுகளைச் செய்துள்ளோம். நிதி போதுமானதாக இல்லாவிட்டால் குறைமதிப்பீட்டின் ஊடாக மேலும் நிதியை வழங்கலாம். வழங்கியுள்ள நிதியின் மூலம் இடம்பெயர்ந்த மக்களுக்கு உணவு, சுகாதார உதவிகளை வழங்க முடியும்.

இந்தப் பேரிடரால ஏராளமான அத்தியாவசிய சேவைகள், உட்கட்டமைப்பு வசதிகள் அழிக்கப்பட்டுள்ளன. பல பகுதிகளில் மின்சார வலையமைப்பு சேதமடைந்துள்ளது. தகவல் தொடர்பு வசதிகள் அழிக்கப்பட்டுள்ளன. வீதிகள் அழிக்கப்பட்டுள்ளன. இதுபோன்று அழிவடைந்த பல உட்கட்டமைப்பு வசதிககளை துரிதமாக மீளமைக்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

அமைச்சுகளுக்கு நிறுவனங்களுக்கு வேறு பணிகள் இருந்தாலும் பிரதான பணியாகக் கருதி இந்த உட்கட்டமைப்பு வசதிகளை மீளமைப்பதற்காக நாம் ஏற்கெனவே திட்டமொன்றை தயாரித்துள்ளோம். மின்சார சபை, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை, தகவல் தொடர்பு நிறுவனங்கள் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபை போன்ற அத்தியாவசிய நிறுவனங்களுடன் நெருக்கமாகப் பணியாற்றுவதன் மூலம் தேவையான பங்களிப்பையும் வழிகாட்டுதலையும் நாங்கள் வழங்கி வருகிறோம். அதனால், மிகக் குறுகிய காலத்துக்குள் இந்த உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சேவைகளை முழுமையாக செயல்படுத்த முடியும் என்று நம்புகிறேன்.

வீதிகள் மற்றும் பாலங்கள் முதல் பாடசாலைகள் மற்றும் நீர் வசதிகள் வரை உட்கட்டமைப்பு வசதிகளை சீர்செய்ய பெரும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. சீராகவும் முறையாகவும் எழுந்து நிற்கப் போராடிக்கொண்டிருந்த ஒரு நாட்டுக்கு இந்த நிலைமை சாதாரண சவாலல்ல. சிறு சுயதொழில் முயற்சி முதல் பெருமளவிலான கைத்தொழில்கள் வரை அனைத்துத் தரப்பினரும் தங்கள் வருமானத்தை இழந்துள்ளன. விவசாயம், விவசாயிகள், கால்நடை வளர்ப்போர் பெரும் பின்னடைவைச் சந்தித்துள்ளனர்.

எனவே, இவை அனைத்தையும் மிக விரைவாக மேம்படுத்த நமக்கு ஒரு துரித திட்டம் அவசியம். அதனால் தான், இந்த அனர்த்த சூழ்நிலையை முகாமைத்துவம் செய்து , விரைவான மற்றும் திறமையான மீள்கட்டமைப்புக்குத் தேவையான சட்டப் பாதுகாப்பு மற்றும் வளங்களை வழங்க அவசரகால சட்டத்தை அறிவித்துள்ளோம். பேரிடரை முகாமைத்துவம் செய்வதற்கும் நமது நாட்டை செயல்திறனுடன் கட்டியெழுப்புவதற் காக அன்றி வேறு எந்த அடக்கு முறை நடவடிக்கைக் கும் இந்த அவசரகால சட்டத்தை பயன்படுத்த மாட்டோம்.

இந்த அவசரகால சட்டத்துக்கு அமைவாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தை நியமித்துள்ளோம். அனைத்து சேவைகளையும் ஒரே இடத்தில் மையப்படுத்தியுள்ளோம். அத்தியாவசிய சேவை பணிமனைகள் 24 மணி நேரமும் திறந்து வைக்கப்பட்டுள்ளன. எனவே, இந்த அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் அலுவலகம் மூலம் மிகவும் திறமையான மையப்படுத்தப்பட்ட செயல்பாட்டை மேற்கொள்ள திட்டத்தை நாங்கள் தயாரித்துள்ளோம்.

நமது நாட்டை முன்பு இருந்ததை விட மிகவும் முன்னேற்றமான நாடாக மாற்ற வேண்டியது எமது அடுத்த பணியாகும். அந்த நோக்கத்துக்காக புனரமைப்புக்குத் தேவையான நிதியை வழங்க ஒரு நிதியத்தை நிறுவ எதிர்பார்க்கிறோம். இந்த பேரழிவு நடந்துள்ள தருணத்தில், நாட்டுக்காக அனைத்து அரசியல் வேறுபாடுகளையும் மறப்போம். இனம், மதம், கட்சி அல்லது நிற வேறுபாடுகள் இல்லா மல் ஒன்றுபடுவோம். எமக்கு அரசியல் செய்ய நிறைய நேரம் இருக்கிறது. பேரிடரை எதிர்கொள்ள அதிகநேரம்கிடையாது. ஒன்றாக இணைந்து நாட்டைக் கட்டியெழுப் புவோம். நாட்டைக் கட்டியெழுப்பிய பின்னர், தனித் தனியாக அரசியல் செய்ய முடியும். குறுகிய வேறுபாடு கள் இல்லாமல் இந்த கூட்டு முயற்சியில் சேர அனைவ ருக்கும் அழைப்பு விடுக்கிறோம். ஒரு தேசிய - சர்வதேச திட்டத்தின் மூலம், சிறந்த ஒருங்கிணைப்புடன் செயல் பட்டு நமது மனசாட்சிக்கு அமைவாக எதிர்பார்க்கும் இந்த நோக்கங்களை நிறைவேற்ற அர்ப்பணிக்குமாறு கோருகிறேன் - என்றார். (ஐ)

## மாவிலாறு...

231 பேரை விமானப் படையினர் ஹெலிகள் மூலம் மீட்டுள்ளனர். மகாவலி ஆற்றின் நீர் வரத்து அதிகமானமையால் திருகோணமலையின் மாவிலாறு அணைக்கட்டு நேற்றுக் காலை உடைப்பெடுத்தது.

நேற்று முன்தினம் இரவே மூதூர், வெருகல், சேருவில பிரதேசங்களின் தாழ்நிலப் பகுதிகளிலிருந்து மக்கள் வெளியேற்றப்பட்டிருந்தனர். இந்த நிலையில், மேலும் பல கிராமங்கள் நேற்று வெள்ளத்தில் மூழ்கின.

இதனிடையே, உப்பாறு பாலம் வழியாக மூதூருக்கு பயணிக்க முடியாத நிலைமை உள்ளது. இதேபோன்று, வெருகல் ஊடான போக்குவரத்தும் முற்றாக தடைப்பட்டுள்ளது. ஈச்சிலம்பற்று மருத்துவமனையும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. அத்துடன், மூதூரின் இறால்குழி, நாவலடி பிரதேசங்களும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இங்கிருந்த மக்கள் இராணுவத்தினரின் உதவியுடன் வெளியேற்றப்பட்டு பாடசாலை ஒன்றில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, திருகோணமலை மாவட்டத்தில் வெள்ளத்தால் 17 ஆயிரத்து 926 குடும்பங்களை சேர்ந்த 57 ஆயிரத்து 858 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 16 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 52 ஆயிரத்து 416 பேர் இடம்பெயர்ந்து உறவினர்கள் வீடுகளிலும் ஆயிரத்து 926 குடும்பங்களை சேர்ந்த 5 ஆயிரத்து 442 பேர் 27 இடைத்தங்கல் முகாம்களிலும் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சீரற்ற...

இடம்பெயர்ந்துள்ளனர். இவர்கள் 51 இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். அத்துடன், சீரற்ற காலநிலையால் இருவர் காயமடைந்தனர். இரு வீடுகள் முழுமையாகவும் 256 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன என்றும் அவர் கூறியுள்ளார். (ஐ)

## சகல...

அத்துடன், அனைத்துப் பரீட்சைகளுக்குமான புதிய திகதி உரிய நேரத்தில் அறிவிக்கப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் இந்திகா லியனகே தெரிவித்துள்ளார். (ஐ)

## இயற்கை...

குருநாகலில் 37, மாத்தளையில் 23 மரணங்களும் பதிவாகியுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சுண்டிக்குளத்தில்...

காலநிலையால் ஏற்பட்ட வெள்ளத்தையடுத்து, அதனை வெளியேற்ற வசதியாக இவர்கள் முகத்துவாரத்தை அகலப்படுத்தும் பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போதே இவர்கள் காணாமல் போயிருந்தனர்.

நேற்று மூன்றாவது நாளாகவும் இவர்களை தேடும் பணி நடைபெற்று வந்த நிலையில் நேற்று மாலை போதிய வெளிச்சமின்மையால் நிறுத்தப்பட்டது. (ஐ)

## நிவாரண...

விழுந்து நொறுங்கியது.

அந்தச்சமயம், ஹெலிகொப்டரில் விமானப் படையை சேர்ந்த இருவரும் நிவாரண பணியாளர்கள் மூவரும் இருந்தனர். ஐவரும் காயங்களுக்கு உள்ளான நிலையில் மாரவில ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். எனினும், விமானி சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். (ஐ)

## பட்டப்பகலில்...

ஆனைக்கோட்டை - சாவல்கட்டைச் சேர்ந்த நேசராசா ரஜீவ் (வயது 30) என்பவரே உயிரிழந்தார்.

கொல்லப்பட்ட இளைஞர் வன்முறை குற்றங்கள் பலவற்றுடன் தொடர்புடைய சந்தேகநபராவார். நீதிமன்ற கட்டளையின் பிரகாரம் குறித்த இளைஞர், பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் கையொப்பமிட வேண்டும் என்ற நிபந்தனையில் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

இதற்கமைவாக, அவர் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் கையொப்பமிட்ட பின்னர் தனது நண்பனுடன் மோட்டார் சைக்கிளில் பயணித்துள்ளார். அவர்கள் திருநெல்வேலி பகுதியில் பயணித்துக் கொண்டிருந்தவேளை இரு மோட்டார் சைக்கிள்களில் வந்த நால்வர் குழு மோட்டார் சைக்களில் பின்னாலிருந்து பயணித்தவரை வாளால் வெட்டியது. இதில், தடுமாறி கீழே விழுந்தவர் உயிரைக் காப்பாற்ற சுமார் 50 மீற்றர் தூரம் வீதியில் ஓடிய நிலையிலும் வன்முறை குழு அவரை துரத்தித் துரத்தி வாளால் வெட்டியது.

காயங்களுடன் ஓடிய அவர் கடை ஒன்றின் முன்பாக விழுந்த நிலையில், மீண்டும் அவரை வாளால் வெட்டிவிட்டு வன்முறை குழு அங்கிருந்து தப்பிச் சென்றது.

குற்றுயிராகக் கிடந்தவரை அங்கிருந்தவர்கள் மீட்டு அம்புலன்ஸ் மூலம் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்ப்பித்தனர். எனினும், அவர் மருத்துவமனையில் உயிரிழந்தார்.

முன்பகை காரணமாகவே இந்தப் படுகொலை இடம்பெற்றதாகவும் இதனுடன், தொடர்புடைய சந்தேகநபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்கள் விரைவில் கைது செய்யப்படுவர் என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## தர்க்கம்...

பதிலுக்கு மருகனும் மாமனாரை தாக்கினார் எனவும் கூறப்படுகிறது.

இந்தச் சம்பவத்தில் துன்னாலை - வேம்படியைச் சேர்ந்த சிவகுமார் நிதீஸ்குமார் (வயது -31) என்பவர் படுகாயமடைந்து பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இதேநேரம், அவரை வெட்டிய மாமனாரும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஐ)

## அரச...

தொடர்ந்தும் நடைபெறும் என்று பொது நிர்வாக அமைச்சு அறிவித்துள்ளது. (ஐ)

## டித்வா...

என்று யாழ். பல்கலைக்கழக புவியியல்துறை பேராசிரியர் நா. பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

மேலும், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியாவுக்கு நீர் வரத்து இன்று திங்கட்கிழமை முதல் குறைவடையும். ஆனால், மன்னாருக்கான நீர்வரத்து வரும் புதன் கிழமை வரை இருக்கும். ஆகவே, குளங்களின் வான் பாயும் பகுதிகளை அண்மித்த மற்றும் ஆற்றங்கரையோரங்களில் உள்ள மக்கள் வெள்ள அனர்த்தம் தொடர்பில் தொடர்ந்தும் அவதானமாக இருப்பது அவசியம்.

வடக்கு, மேற்கு மற்றும் கிழக்கு பகுதி கடல்கள் கொந்தளிப்பான நிலையில் காணப்படும் என்பதனால் மீனவர்கள் கடலுக்கு செல்ல வேண்டாம் என்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார். (ஐ)

## பாதிக்கப்பட்ட...

செயலாளர்களுக்கு விசேட அறிவுறுத்தலை விடுத்து பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சம்பத் துய்யகொந்த மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிவிப்பில், அனர்த்த நிவாரண சேவை சுற்றறிக்கை மற்றும் வழிகாட்டல்கள் 01-2025 ஊடாக விரைவாக நிவாரணமளிப்பதற்கு உரிய அரச நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சின் செயலாளரால் எனக்கு அனுப்பி வைக்கப்பட்ட சகல பிரதேச சபை செயலாளர்கள் மற்றும் பிரதேச சபை உதவி செயலாளர்கள் சங்கத்தினரால் 2025.11.29ஆம் திகதியன்று அனுப்பி வைக்கப்பட்ட கடிதம் ஊடாக பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

இதன்படி, தற்காலிக பாதுகாப்பு முகாம்களுக்கு செல்வர்களுக்கு மாத்திரம் உலர் உணவுகளை வழங்க வேண்டும் என அனர்த்த நிவாரண சேவை சுற்றறிக்கை மற்றும் வழிகாட்டல்கள் 01-2025இல் குறிப்பிடப்படவில்லை. அந்த சுற்றறிக்கை இல 5.1.5.1.2.1 ஊடாக சகல தரப்பினருக்கும் உலர் உணவு வழங்குவதற்குரிய மானியம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆகவே தற்காலிக முகாம்களுக்கு வருகை தராத நிலையில், பாதிக்கப்பட்டுள்ள சகல தரப்பினருக்கும் உலர் உணவுகளை வழங்க வேண்டும் - என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# அத்தியாவசிய சேவைகள் ஆணையராக பிரபாத்

கொழும்பு, டிசெ. 01

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகமாக பிரபாத் சந்திரகீர்த்தி நியமிக்கப்பட்டுள்ளார்.

2025ஆம் ஆண்டின் அவசரகால நிலைமை ஆணை இலக்கம் 1இன் (பல்வேறு ஏற்பாடுகள் மற்றும் அதிகாரங்கள்) பிரிவு 11(1) விதிகளின் பிரகாரம் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

அத்தியாவசிய சேவைகளை வழங்குதல் மற்றும் பேணுதல் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் செயல்படுத்துதல் மற்றும் ஒருங்கிணைத்தல் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தின் பொறுப்பாகின்றது.

பிரபாத் சந்திரகீர்த்தி தற்போது பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சின் செயலாளராகவும் பணியாற்றி வருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# பேராதனை மண்சரிவில் 23 பேர் உயிரிழந்தனர்!

கண்டி, டிசெ. 01

**பேராதனையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற மண்சரிவில் 23 பேர் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.**

பேராதனை - சரசவிகம பிரதேசத்தில் இடம்பெற்ற இந்த மண்சரிவில் சிக்கியவர்களின் 14 சடலங்கள் மீட்கப்பட்டுளன.

இந்த மண்சரிவால் 10 வீடுகள் முற்றாக அழிவடைந்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# எரிபொருட்களின் விலை மாறாது!

கொழும்பு, டிசெ. 01

டிசெம்பர் மாதத்துக்கான எரிபொருட்களின் விலையில் எந்த மாற்றமும் இல்லை என்று இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தலைவர் அறிவித்துள்ளார்.

இதன்படி, நாட்டில் தற்போது நடைமுறையிலிருக்கும் விலைகளிலேயே எரிபொருட்களை பெறமுடியும் என்றும் அவர் கூறினார். (ஐ)

# சிறுவர், பெண்கள் உதவிபெற இரு இலக்கங்கள் அறிமுகம்!

கொழும்பு, டிசெ. 01

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பெண்கள், சிறுவர்கள் தொடர்பான எந்தவொரு தகவலையும் உடனடியாக தெரிவிக்க கட்டணமில்லாத இருதொலைபேசி சேவைகள் தற்போது 24 மணிநேரமும் செயல்பட்டு வருகின்றன என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சுடன் இணைந்துள்ள தேசிய மகளிர் சபையின் 1938 பெண்கள் உதவி அவசர தொலைபேசி இலக்கம், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் 1929 சிறுவர் உதவி அவசர தொலைபேசி இலக்கங்கள் மூன்று மொழிகளில் இலவசமாக செயல்படுகின்றன.

பெண்கள் தொடர்பான தகவல்களுக்கு - 1938 சிறுவர்கள் தொடர்பான தகவல்களுக்கு - 1929 அழைக்க முடியும். (ஐ)

# வெள்ளத்தில் மூழ்கியது குருநாகல் மருத்துவமனை

கொழும்பு, டிசெ. 01

குருநாகல் போதனா மருத்துவமனைக்கு அருகிலுள்ள கழிவுநீர் கால்வாய் நிரம்பியதால் மருத்துவமனையின் 8 விடுதிகள் வெள்ளத்தில் மூழ்கின என்று மருத்துவமனை செய்தி தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

கனமழையால் கால்வாய் நிரம்பியதாகவும் இதனால், பக்கவாட்டு சுவர் உடைந்ததாகவும் சுகாதார ஊழியர்கள் தெரிவித்தனர்.

இதேநேரம், 8 விடுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. அந்த விடுதிகளிலிருந்து நோயாளர்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர் என்று மருத்துவமனையின் பணிப்பாளர் இயக்குநர் திருமதி மிஹிரி பிரியங்கனி தெரிவித்துள்ளார்.

# கொழும்பு - கண்டி வீதி யக்கலையுடன் மூடப்பட்டது

கொழும்பு, டிசெ. 01

கொழும்பு - கண்டி பிரதான வீதியை யக்கலை ஆயுள்வேத நிலையத்துக்கு அண்மித்த பகுதியில் மூடுவதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

யக்கலை ஆயுள்வேத நிலையத்திற்கு அருகில் உள்ள பாலத்தின் நடுப்பகுதி தாழிறங்கியதை அடுத்தே வீதி மூடப்பட்டுள்ளது.

இதனால், யக்கலை - திஹாரிய இடையிலான வீதியைத் தற்காலிகமாக மூட நேரிட்டுள்ளதாகவும் சாரதிகள் மாற்று வீதிகளைப் பயன்படுத்துமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (ஐ)

# இலங்கைக்கு உதவிகளை அனுப்புகின்றது ஜப்பான்

கொழும்பு, டிசெ. 01

டித்வா சூறாவளியால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு ஜப்பான் அவசர உதவிகளை அனுப்புகிறது.

சூறாவளியால் ஏற்பட்ட சேதங்களை மதிப்பீடு செய்ய, ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகமை (ஜெய்கா)மூலம் 4 உறுப்பினர்கள் கொண்ட சிறப்பு மதிப்பீட்டு குழுவை அனுப்ப ஜப்பான் அரசு தீர்மானித்துள்ளது. இந்த குழுவில் மருத்துவ நிபுணர்களும்இணைந்துள்ளனர்.

இந்தக் குழு, தரைப் பரப்பில் மருத்துவ தேவைகளை கண்காணிக்கும். அத்துடன், வேறு குழுவை அனுப்ப தேவையிருக்கிறதா என்பதனை ஆராயும். இந்தக் குழு நேற்று இலங்கையை வந்தடைந்தது.

சூறாவளியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக தற்காலிக கூடாரங்கள், போர்வைகள் உள்ளிட்ட அவசர நிவாரணப் பொருட்களை இலங்கைக்கு வழங்க ஜப்பான் அரசு முடிவு செய்துள்ளது. (ஐ)

# தொலைபேசி நிறுவனங்களின் சலுகை தொடர்ந்து செயல்படும்

கொழும்பு, டிசெ. 01

அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும்முகமாக, தொலைத்தொடர்பு சேவைகளை வழங்கும் நிறுவனங்கள் முக்கிய தீர்மானங்களை எடுத்துள்ளன.

டிஜிற்றல் பொருளாதார பிரதி அமைச்சர் எரங்க வீரரத்ன தலைமையில், தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு மற்றும் தொலைதொடர்பு சேவை வழங்குநர்களின் தலைமை நிர்வாக அதிகாரிகள் கலந்துகொண்ட கூட்டத்தில், வானிலை சீரடையும் வரை பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள எந்தவொரு தொலைபேசி இணைப்பையும் செயலிழக்கச் செய்யாமல் பராமரிக்க தீர்மானம் எடட்ப்பட்டுள்ளது.

அத்துடன், முற்கொடுப்பனவு வாடிக்கையாளர்களுக்கு விசேட நிவாரணம் தொடர்ந்தும் நீடிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, டயலொக், எயார்ரெல் பயனர்கள் #006# என டயல் செய்வதன் மூலம் 3 நாட்களுக்கு 250 நிமிடங்கள், 250 குறுஞ்செய்திகள், 1 ஜி. பி.டேட்டாவை பெறலாம்.

ஹட்ச் வாடிக்கையாளர்கள் #3111# டயல் செய்து 300 நிமிடங்கள், 1 ஜி. பி.டேட்டாவை பெறலாம். மொபிரெல் பயனர்கள் "YES" என 7677க்கு குறுஞ்செய்தி அனுப்பி 300 நிமிடங்கள், 300 குறுஞ்செய்திகள், 1 ஜி. பி.டேட்டாவை பெறலாம்.

மேலும், சிறி லங்கா ரெலிகொம், மொபிரெல் நிலையான தொலைபேசி வாடிக்கையாளர்களுக்கு இலவச அழைப்பு வசதிகளையும் பைபர், ஹோம் 4ஜி எல். ரி. ஈ மற்றும் ஏ. டி. எஸ். எல். உள்ளிட்ட ஹோம் ப்ரோட்பேண்ட் பயனர்களுக்கு வரம்பற்ற இணைய இணைப்பையும் வழங்கவுள்ளன. (ஐ)

# கட்டுநாயக்கா விமான நிலையம் வருவோருக்கு முக்கிய அறிவித்தல்

கொழும்பு, டிசெ. 01

நிலவும் பாதகமான வானிலையால் விமான நிலையத்துக்கு வரும் பல பாதைகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையம் ஊடாக பயணிக்கும் அனைத்து பயணிகளுக்கும் விமான நிலையம் விசேட பயண ஆலோசனையை வெளியிட்டுள்ளது.

இதன்படி, கொழும்பு - கட்டுநாயக்கா அதிவேக நெடுஞ்சாலை தற்போது விமான நிலையத்துக்கு வருவதற்கு பாதுகாப்பான மற்றும் நம்பகமான வழியாக குறிப்பிட்டு, பயணிகள் மற்றும் அதிகாரிகள் அந்தப் பாதையை பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன், விமான நிலைய வளாகத்தில் ஏற்படும் நெரிசலை குறைக்கும் முயற்சியின் ஒரு பகுதியாக பயணிகள் விமான நிலையத்துக்கு பார்வையாளர்களை அழைத்து வருவதைத் தவிர்க்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

கடுமையான வானிலையால் தொடர்ந்து சிரமங்கள் ஏற்பட்டாலும், தடையற்ற செயல்பாடுகளை பராமரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று விமான நிலைய நிர்வாகம் தெரிவித்துள்ளது. (ஐ)

# I,500 தகவல் தொடர்பு தளங்கள் திருத்தப்பட்டு இயங்குகின்றன!

கொழும்பு, டிசெ. 01

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் தடைப்பட்டிருந்த 4 ஆயிரம் தகவல் தொடர்புத் தளங்களில் ஆயிரத்து 500இற்கும் அதிகமானவை தற்போது மீளச் சீரமைக்கப்பட்டுள்ளதாக டிஜிற்றல் பொருளாதார பிரதி அமைச்சர் எரங்க வீரரத்ன தெரிவித்துள்ளார்.

அத்துடன், மிகுதியாக உள்ள தளங்களில் சேவைகளை மீள நிலைநாட்டுவதற்கான பணிகள் தொடர்ந்து முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஷசீரற்ற காலநிலையால் ஏற்பட்ட சேதங்கள் காரணமாக தகவல் தொடர்புச் சேவைகளில் ஏற்பட்ட இடையூறுகளை விரைவில் நிவர்த்தி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

தகவல் தொடர்புத் தளங்கள் என்பது தொலைதூரங்களுக்குச் சமிக்ஞைகளை அனுப்பி, தொலைபேசி அல்லது இணைய சாதனத்துக்கு தொடர்பு சேவைகளைக் கொண்டு சேர்க்கும் தொலைதொடர்பு கோபுரங்கள், உபகரணங்கள் மற்றும் கட்டமைப்புகளைக் கொண்ட ஒரு மையப்புள்ளியாகும்.

மெல்சிரிபுரவில் மண்சரிவு:

# 3 மாதக் குழந்தை உட்பட 5 பேர் பலி: 9 பேர் மாயம்

குருநாகல், டிசெ. 01

குருநாகல், மெல்சிரிபுர - கந்துமல்ல பகுதியில் ஏற்பட்ட மண்சரிவில் 3 மாதக் குழந்தை உட்பட 5 பேர் உயிரிழந்ததோடு, 9 பேர் காணாமல் போயுள்ளனர்.

சனிக்கிழமை மாலை வரை பல இடங்களில் மண்சரிவு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக, மண்சரிவில் பாதிக்கப்பட்டவர்களை மீட்கும் நடவடிக்கை கடினமாக இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# மின் இணைப்பு கோபுரம் சேதம்!

கொழும்பு, டிசெ. 01

ரந்தம்பே - மஹியங்கனை இடையிலான மினிப்பே பகுதியில் நிறுவப்பட்ட 132 கிலோ வோல்ட் மின் இணைப்பு கோபுரம் சீரற்ற வானிலையால் முற்றாக சேதமடைந்துள்ளது.

சீரற்ற வானிலை காரணமாக நாட்டில் பல பகுதிகளில் உள்ள மின் இணைப்பு கோபுரங்கள் சேதமடைந்துள்ளன.

சேதமடைந்த மின் இணைப்பு கோபுரங்களை சீரமைக்க மின்சார சபையின் அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். (எ)

# சிறுவர் பராமரிப்பகங்களை இன்று முதல் திறக்க அனுமதி

கொழும்பு, டிசெ. 01

பாதுகாப்பான சிறுவர் பராமரிப்பு நிலையங்களை மீண்டும் திறக்குமாறு அரசாங்கம் அறிவித்தல் அனுப்பியுள்ளது.

தற்போதைய அனர்த்த நிலைமையில் பொதுமக்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கான அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடுபவர்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் அரச, தனியார் துறைகளில் அத்தியாவசிய சேவைகளில் ஈடுபட்டுள்ள அதிகாரிகள், தொழில்நிபுணர்களின் குழந்தைகளுக்குப் பராமரிப்பு வழங்குவதற்காகவே இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 01.12.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org